பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(19.04.2024 முதல் 23.04.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 032 (04) PJN/GKMS/2024 தேதி: 18.04.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (13.04.2024 முதல் 17.04.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -23.04.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/04 | 14/04 | 15/04 | 16/04 | 17/04 | | நாள்-1 19/04 | நாள்-2 20/04 | நாள்-3 21/04 | நாள்-4 22/04 | நாள்-5 23/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 35 | 35 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 36 | 37 | 36 | 36 |
| 26 | 26 | 26 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 28 | 28 | 28 | 27 |
| 3 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் | 5 | 4 | 5 | 6 | 5 |
| 54-95 | 62-86 | 63-92 | 58-92 | 53-95 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-80 | 50-80 | 50-80 | 50-80 |
| 4 | 3 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 22 | 22 | 20 | 20 | 16 |
| கிழக்கு தென் கிழக்கு | வடக்கு வட மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (19.04.2024 முதல் 23.04.2024 வரை):**

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாக காணப்படும். வெப்ப நிலை 27-36 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 16-22 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஏப்ரல் 21 லிருந்து 27 வரை மழை (1.52 மி.மீ) இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (35.08 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.71 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| உளுந்து மற்றும் பச்சை பயிர் | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | உளுந்து பயிரில் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது ப்ரோப்பிகானசொல் 1 மி.லி என்ற அளவில் பயன்படுத்தவும். |
| | இலை சுருள்வு நோய் | உளுந்து மற்றும் பச்சை பயிரில் இலை சுருள்வு நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் 0.2 கிராம் தையாமீத்தாக்சம் (25 WG) கலந்த கரைசலை பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25 வது நாட்களில் பயன்படுத்தவும். |
| கத்தரி | இலைப் புள்ளி மற்றும் பழம் அழுகல் நோய் | கத்தரியில் இலைப்புள்ளி மற்றும் பழம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் (Pseudomonas fluorescens) அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் (Bacillus Subtilis) ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அல்லது 5 மி.லி கலந்த கரைசலை உடனடியாக தெளிக்க வேண்டும். |
| கால்நடை | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில் ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாக காணப்படும்.

**முதல்வர்**